*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **27 மே, 2025**

## பத்திரிகை செய்தி

சர்வதேச யோகா தின விழா வரும் ஜூன் 21 ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி அதன் 25 நாள் முன்னோட்ட நிகழ்ச்சி மத்திய ஆயுஷ் அமைச்சகம் சார்பில் புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று(27-05-2025) நடைபெற்றது. மாண்புமிகு ஆயுஷ் மற்றும் சுகாதாரத்துறை மத்திய இணையமைச்சர் திரு பிரதாப்ராவ் யாதவ் தொடங்கி வைத்த நிகழ்ச்சியில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாசநாதன் கலந்து கொண்டு உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து யோகாசன கூட்டு பயிற்சியில் ஈடுபட்டார்.

நிகழ்ச்சியில், மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு க. லட்சுமி நாராயணன், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, தலைமைச் செயலர் டாக்டர். சரத் சவுகான், சுகாதாரத்துறைச் செயலர் திரு ஜெயந்த குமார் ரே, அரசு செயலர்கள், ஆயுஷ் நிறுவனத்தின் தலைமை இயக்குனர் டாக்டர் காசிநாத் சமகண்டி, புதுச்சேரி ஆயுஷ் நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் ஸ்ரீதரன், மொரார்ஜி தேசாய் தேசிய யோகா நிறுவன பேராசிரியர்கள், அதிகாரிகள் மற்றும் திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர். பல்வேறு விதமாக யோகாசன செய்முறைகள் செய்து காட்டப்பட்டது.